பிஸ்மில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

தீ தா று மா லை.

தற்கரை பீர்முகம்மது சாகிபவர்கள்

சீடராகிய

வண்ணமலைச் சார்பு நாட்டிலுள்ள

ஷெய்கு பீர்முகம்மதவர்கள்

பாடியது.

இட்டா

பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

சக்கரவர்த்தி பிரஸ்,

189, தங்கசாலை வீதி, சென்னை.

1953. [அணா 5.

NT:417
153

பிஸ்மில்லாஹி

மகுதூம்முகம்மதுப் புலவர்—முகவுரை.

எல்லா வுலகங்களையும் உயிர்களையும் அமைத்தணவீந்தாளுகின்றவல்லதன்மையுள்ள அல்லாஹுத்த ஆலாயெல்லாம்படைக்க முன்னே இலங்குந் தன்னூரினால் படைப்புள்ளவைக்கெல்லாம் பார்த்திவராக முகம்மது முஸ்தபா றசூல் சல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை யமைத்துத் தன்தோழரென்றுந் தன்றூதரென்றுந் தனக்கு வந்தோரென்றுந் தானே புகழ்ந்து முர்சல் நபி யென்ற முத்திரை பெயருங் கொடுத்து, அந்நபியார் நம்மை யெவ்வஸ்து மறியவேண்டு மென்றெண்ணி விருப்பமே பெரியதாய் ஆதமையத்தே அவர் மகமகவாய் லட்சத்திருப்பத்தினாலாயிர நபிகட்கும் முந்நூற்றுப்பதின்மூன்று முர்ஸலாகிய நபிகட்குங் காத்திமுல்லன்பியாவாகக் காரணத்தோடு சீருஞ் சிறப்புஞ் செல்வமுங் கல்வியும் பேருந்தழைத்துப் பெருகிய மக்காவில் அதுனான்கிளையில் அப்துல்முனாபு புத்திரராய்த் தழைத்த தீருள்ள அப்துல் ஹாஸிமென்னுமரியவர் அவர் மகன் அப்துல் முத்தலிபாகினோர் பெற்ற மக்களிற் சிறந்தோர் மகத்துவமுடையோர் பேருடையோர் பெருமையுடையோர் வீருடையோர் வெற்றியுடையோர் சுத்தியுடையோர் கல்வியுள்ளோர் கழறு மெய்ப்புகழுமுள்ள அப்துல்லா அவரோகணுதல்மீது ஒளிவாயமைத்தும் அவ்வப்துல்லா மனைவியார் அழகினினழகர் அருளினிலருளார் பொறையிற் பொறையார் புகழினிற் புகழார் கற்பெலாந்திரண்ட காரிகையெந்த நலமு மெழில் கொண்ட ஆமினார் தங்கள் வயிற்றிருத்தியும் தரணியில் அநேக காரணத்தோடு பிறப்பித்தனன். பிறந்து வளர்ந்த பெருமைமுகம்மதற்கு வயதோர் நாற்பதி வள்ளலனுப்பிய சதுமாமறை புறுக்கானென்னச்சாற்றிய வேதமுறையோடுமுணர்ந்து முபநிடதத்தை யோர்ந்த ஞானியர் மவுனியர் மன்னுயிரெல்லாந் தன்னுயிர் போல எண்ணிடுமெண்ணத்தார் இரக்கத்தார் துறக்கத்தார் அறக்கற்றார் பெருக்கத்தார் மதப்பற்றார் உருக்கத்தார் ஞானமணி

பாடிய ஞான குருவார் தற்கரை பீர்முகம்மது சாகிபவர்கள்சீடர் தெளிவிற் தெளிந்தோர் தேடருங்குருவார் சரிதை கிரியை போக ஞானந் தன்னை யுணர்ந்தோர் அற்பினிலாகிய ஆகமத்தோர் சரி அத்து தரீக்கத்து ஹகிக்கத்து மஃரிபத்திந்நான்கும் எழிலொடு தேர்ந்தோர் நலமெல்லாமுள்ளனர் நீர்வளஞ் நிலவளஞ் சிறந்த வண்ணமலைச் சார்பென்னும் வளம்பெரு நாட்டினர் ஷெய்குபீர் முகம்மதென்று செப்பிடு நாமத்தார் சொல்லுமித் தீதாறுமாலை சுகியொடும் பா..னர். இந்தத் தீதாறுமாலையை யேட்டி லெழுதிப் படித்து வந்தோர்கள் எழுத்துச் சொற்களறியார் தெவ்விடத்தும் வழங்குதலால் முத்திப் பொருளீதென்ன முயற்சிகொண்டு அச் சிட்டால் யார்க்கும் அறியரிதான வுண்மைத் தெளிந்து கொள்வா ரென்னத் தனமுங் கனமுந் தயவும் குணமும் நயமுஞ் சயமும் நலமும் புகழும் பொறையும் அறமும் அன்பும் ஆதரவும் உள்ள ளனர் தேனொழுக்கையுண்டு தித்திப்புமீறிஆன அறுக்கால்வண்டின ராகம்பாடும் பூமலி பூங்காவுசூழ் ஆடகமிருந்துறும் அழகிய வேடர் சந்தை யூரென்னும் மேன்மையார் நாட்டின் ஆராறும் போற்றும் அழகிய மீரா வுசைன் ராவுத்தர் மேன்மகவான செய்யி து பாபாராவுத்தரென்போர் செய்தவமெலாந் திரண்டு மணியா யணியாய் மருளையகற்றும் மாண்புறு நூலுணர்ந்தோன் யுக்தியின் மிகுத்தோன் உதவியிற் சிறந்தோன் பக்தியுள்ளான் பண்புள் ளான் நண்புள்ளான் ஆயுர்வேதமாய்த் துணர்பண்டிதன் கற்பகங் களுண்டு காய சித்தியுள்ளோன் சாத்தை யுள்ளடக்கித்தவஞ்செயு மேலான் அட்டசித்தி நவசித்தி யறிந்துள சிந்தையன் யோக ஞா னம் உண்மைமுறை தெளிந்தோன் மலையினேர் புஜத்தன் முகம் மது மீராவுசைன் ராவுத்தர் முயற்சியால் சென்னைமாநகரிற் சிறப் போடும் அச்சிட்டு வன்னமா முடிந்தன வல்லனருளினாலே.

முற்றிற்று.

பிஸ்மில்லாஹி

நீ தா று மா லை.

காப்பு.

வெண்பா.

உடலறிவு ஞானமிகு முண்மையினையான் கூறக்
கடலறிவு தந்தருள்வாய் கத்தனே — திடமு[illegible]னை
ஜெகமினினுந் நீதாரைச் சேவித்தோர் தங்களுக்கு
மகமகிழ்ந்து நீயருள் செய்யாதி.

கண்ணிகள்.

சீர்பெருமாதி நீதாரைச் செப்புதற்கு
நேர்[illegible]குஞான நிண்ணயங்கள் குன்றாமல் 1

எல்லாவுயிர்க்கு மிரணமிகாபவனே
அல்லாவேயுன்ற னருளுதவி செய்வாயே 2

ஸல்லல்லாவள்ளல்நபி ஷபா அத்துமுண்டாசல்
வல்லநபியிறசூல் மலர்ப்பாதம் போற்றிசெய்வேன் 3

ஆதநபி முதலா யாருமன்பி யாக்கடமை
நீதமுறப் போற்றி நிகழ்த்துவே னெந்நாளும் 4

ஆலமதிற்காபிர்களை யடர்ந்துவெட்டியரபுமிகும்
நாலியார்கள் பாதநான் மறவேனெப்போதும் 5

கத்தனருள்பீபி காத்தூனச் சென்னத்தெனும்
பத்தினியார் தம்மைப் பண்பாகப் போற்றிசெய்வேன் 6

சொர்க்கத்துபல்ஜிபுரீல் சோபனமாகக் கொடுக்கும்
வர்த்தத் தசனுசைனின் மலர்ப்பாதம் போற்றிசெய்வேன் 7

ஆலநபி யவுலா தவர்தோழ ராகிவளர்
மாலசுகாபிகளை வாழ்த்தித் துதிப்பேனே 8

மேலானவேதவிரி பொருளுணர்த்துகின்ற
காலிமாம்கடம்பை நான் மறவே னெப்போதும் 9

வல்லானருளால் பகுதாலில் வாழ்ம்பு
துல்காதிர் முகியித்தீன் சீர்பாத நான்மறவேன் 10

நாகூர்ப் பதிவாழு நல்லஷாகுல்கமீதின்
வதார்பதத்தை வாழ்த்தித்துதிப்பேனே 11

சாதாத்து பீர்முகமத் சாகிபவர்களிரு
பாதாரவிந்தம் பரவிப்பணிவேனே 12

ஆகிநபிஹிஜ்ஜூறத் தாயிரத் திருநூறோ
டோதும் [illegible]ப்பதாம்வருட முரைக்கும் றமலான்மாதம் 13

தங்குதெய்தி பத[illegible]தொன்பதிற் சார்ந்ததிங்கள் ஜெயவருடம்
மங்களஞ்சேர் தைமாதம் வளர்தெய்தி யெட்டதிலே 14

கம்ம விழிளகற்றிக் கதிர்விரிக்குந் தீதாறை
யம்மானையாக வறைந்தேன் புவிமீதில் 15

இல்லல்லா தெரிசனைதா னெல்லவர்க்கு முண்டாகக்
கல்பிலுவந்து கழறினேன் றீதாரை 16

ஓதநீர்முன்னே யொருசிரட்டை நீரைவைத்துப்
போதுமென்பார்போலப் புரிந்தேன் புலவர்கள்முன் 17

சொன்னமிகு மீராஞ்சி சொல்வளரு மேரிநகர்
வனனமலைச்சார்பில் வளர்மீரா செய்தவத்தில் 18

வரிசைமுகம்மதருள் வளர்செய்து முஹியித்தீன்றந்
தெரிசனை வணக்கமிகும் ஷெய்கு பீர்முகம்மதென்போன் 19

எள்ளுக்குளெண்ணெயைப்போ லிருந்ததொரு நற்பொருளை
விள்ளத்துணிந்ததொரு வேதனருளாலே 20

கல்லுக்குள்ளே முளைத்த கதலியதுபூத்தாற்போற்
றில்லிக்குள்ளேயிருந்த செம்மலது திறந்து 21

ஈமானிலாறு மிசுலாத்தி லலைந்ததுடன்
ஞமனமாக நடக்கும்வகை சொல்லுகிறேன் 22

சாதாத்து பீர்முகம்மத் சாகிபவருளால்
நாதாந்தந்திறவுகோலை நவில்வதற்கு நாயகனே 23

வல்லாவெனக்கு வாக்கருள்வாயாண்டவனே
சல்லல்லாகு அலைகி சையிதிற்றசூல் பொருட்டால் 24

சறகுவழி நான்கைச் சாவை மறந்துவிட்டும்
பிறவிக் குருடர்கள்போற் பிசகாய்த்திரியாமல் 25

சரிஅத்து முதல்வழியுந் தனையு மறிந்துணர்க
தரிகத்தும் அகிகத்துந் தன்னுடலிற்றானறிய 26

ஜெகத்திலே யுள்ளவர்க்குச் செப்புகிறேன் றீதாரை
யுகப்பாக நம்முடலி லுடையோ னமைத்தவகை 27

பாலுட் டயிர்நெய்யும் பதிந்தங்கி ருந்தாற்போல்
தாலில் அலிபைத் தானே யமைத்துவைத்தான் 28

காலுமதின் றலையுங் கண்டறியா ரிவ்வுடலில்
நூலின்வகையறியார் நுவல்நூ ரையும்மறியார் 29

அல்லாமுகம்மதுவை யவருடலிற் றானறியார்
அல்லாவுடையபங்கு மவன்சிபத்தை யும்மறியார் 30

ஆலநபிபங்கு மவரடையா ளம்மயார்
வாலகுருவுறியார் வாலிபப்பொருளறியார் 31

ஒலுவிநியத்து மொலுவின் பறுலறியார்
ஒலுவன்சுன்னத்து மொலுவின் முறிவறியார் 32

தொழுகையி னியத்துந் தொழுகையின் பறுலறியார்
தொழுகையின் சுன்னத்துந் தொழிகைமுறிவறியார் 33

ஐந்துமா னுமையறியா றைந்துகிபுலாவறியார்
ஐந்துகலிமாவு மதின்விபர மும்மறியார் 34

பஞ்சவுடலிற் பாரகசிய மறியார்
பஞ்சபூத மைந்துடைய பங்குகளுந் தானறியார் 35

மூச்சி நிலையறியார் முன்னவனைத் தானறியார்
பேச்சிநிலையறியார் பீர்நிலையும் தானறியார் 36

சூழ்ச்சமுறு மூச்சின் சுழிமுனையுந் தானறியார்
கூச்சமதைத் தானறியார் கூடுந் தலமறியார் 37

ஈமானிசுலா மின்னதென்றுந் தானறியார்
நாமான நற்கலிமா நான்கெழுந்துந் தானறியார் 38

தீன்பேர்தனையார தாய்தகப்பன்றி பேரறியார்
இன்பந்தனை யறியார் இரவுபகலை யறியார் 39

ஓதுமவுரு தொடுங்குந்தலமறியார்
பாதுமாழ்ப் பூக்காத பாழ்வீடு தானறியார் 40

குண்டலியைத் தானறியார் குருவின்பொருளறியார்
மண்டலங்களேழறியார் மசுசுக்குந் தானறியார் 41

நீதிதனையறியார் நித்திரையுந் தானறியார்
ஆதிநிலை தானறியார் அலுபுனிலையை யறியார் 42

ஏழுகட லேழ்வான மெழுபுவியுந் தானறியார்
வாழும்பதியின் வகைவிபரந் தானறியார் 43

முழுக்கி னழுக்கை மூழ்குந் லுறையறியார்
இழுக்குமிரவுபக னிறையோ னிருப்பறியார் 44

பூக்குந்தலமறியார் புதுமலருந் தானறியார்
சாகாத காலும் ஜாலாலும் ஜமாலறியார் 45

வேகாத்தலையும் வேதமுதலறியார்
ஆகாத்தியத்தா லழியுந்தலமறியார் 46

சூலமதாகிநின்ற சுழித்த வெழுத்தறியார்
மூலமென்ற மூன்றெழுத்து முக்கோணமுமறியார் 47

ஆதம் மலையறியார் அறபாத்துந் தானறியார்
வேதமலை பொன்னின்மலை வெள்ளுருந் தானறியார் 48

பச்சைமலை பவளமலை பனிமுகிலுந் தானறியார்
வச்சிரமலை யிருளின்மலை வாசவமலை தானறியார் 49

நாயனதுபங்கு நவிசிபத்துந் தானறியார்
நேய நபியுடைய றெவுலாவுந் தானறியார் 50

காட்சிபெறவந்த கதிபாத்திமாபீபி
நாச்சியா ரிருக்கு நல்லதல மறியார் 51

நான்குவகைப்பீர் நான்கு பக்கீறை யறியார்
நான்கு இமாமும் நான்கு கிபுலாவை யறியார் 52

நான்கு மாகாமும் நவில்நான் மலக்கறியார்
நான்கு நபுசும் நல்றாகுந் தானறியார் 53

நால்யார்க டங்களோடு நல்லா னுசைனை யறியார்
பால்பெருகு மேலோர் பணியுமிட மறியார் 54

உந்திதனை யறியா ருண்மையெழுத் தறியார்
சந்திரனையறியார் சுமுசாரமுந் தானறியார் 55

ஆதிதனையறியார் அருமதையுந் தானறியார்
மாதமொடு திங்கள் வருடமதைத் தானறியார் 56

நாலுமத கரியார் நாற்கோணந் தானறியார்
தாலுமதை யறியார் தரிக்கும் பொர்ருளறியார் 57

சரமின் வகையறியார் சஞ்சரிப்புந் தானறியார்
திரியுங் குணமறியார் திறவுகோலை யறியார் 58

தானுந் தனையறியார் தலைவனையுந் தானறியார்
ஆணும் பெண்ணுமான அல்குலமுந் தானறியார் 59

நூறான நல்லெழுத்து நூறின்வகையறியார்
நூறாகி நம்முள் நூனிற் றுலங்குதுபார் 60

வேதமதி லுள்ளதைநான் விளம்புகிறேன் கேளுமினி
ஆதமக்கு ளெல்லோர்க்கும் அழகாகச் சொல்லுகிறேன் 61

தெரிந்துதெரியார்கள் தீர்க்கம்பெற வேயிதனை
யறிந்தமட்டு நனறு யருளுகிறேன் கேளுமினி 62

காலும் பணராகுங் கழறுந் தலைவேறாய்
ஆல விருட்சமதை யாதி ளைமத்துவைத்தான் 63

கற்பக விருட்சமல்லோ கால்மேற் றலைகீழா
யிப்போ துன்யாவி லிறக்கிவிட்டான் வெறுமரமாய் 64

சூச்சமதுகண்ணுகுஞ் சுழிமுனை நுக்தாகும்
கூச்சமது மூச்சுங் கூடுவது நபுசுத்தலம் 65

திறவு குருமொழிதான் தீதாறு கல்பாகும்
திறவுகோல் மூச்சாகுஞ் செப்பமுடி யாதுகண்டீர் 66

மூமினது கல்பாகு முசாபாது காலாகும்
ஆமீன் பிசுமில் அடிமுடியுந் தானாகும் 67

நாமான மாக நவிலுகிறேன் ஈமானை
யீமானி லாறு மியம்புகிறேன் கேளுமினி 68

ஈமானிலாறு மிசுலாமி லைந்துடனே
நாமான மாக நடக்கும் வகைசெப்புகிறேன் 69

ஈமானிலேமுதற்று னிறையொருவன் றுனுகும்
ஈமானில்ரண்டாவ திறைமலக்குத் தாமாகும் 70

ஈமானில் மூன்றுவ திறைவேதந் தானுகும்
ஈமானில் நான்காவ திறைதூதர் தாமாகும் 71

ஈமானி லேந்தாவ திறைவன் கியாமத்தாம்
ஈமானிலாறுவ திவர்கள்செய்யு நன்மைதின்மை 72

இசுலாமி லேந்துவகை யியம்பிகிறேன் கேளுமினி
இசுலாமிலே முதற்று னிறையோன் கலிமாவாம் 73

இசுலாமில்ரண்டாவ திறைவன்தொழுகையதாம்
இசுலாமில் மூன்றுவ திறைவன்சக்காத்துவாம் 74

இசுலாமில் நான்காவ திறைவ னேன்பாகும்
இசுலாமி லேந்தாவ திறைவனது ஹஜ்ஜாகும் 75

ஐந்துமா மின்விபர மருளுகிறேன் கேளுமினி
சந்தமிகுஞ் சடலந் தானதுவே யொன்றுகும் 76

இரண்டாவது றாகுநிலே நல்லகல் மூன்றுகும்
குன்றுதபுத்தியது கூறினே னுன்காகும் 77

அஞ்சாவது நினைப்பா மறிந்துகொள்ளு மிமாமைந்தும்
எஞ்சா ணுடலி லியம்புங் கிபுலாவைந்தும் 78

ஒன்றுவ தாம்அறுசு வுயர்குரு சிரண்டாகும்
நன்றுகும் பைத்துல்மகு மூற்றவே மூன்றுகும் 79

இலங்குகி ன்றபைத்துல்முக்கத் தீசதுவும் நான்காகுந்
துலங்கு கருவாவோடு சொன்னவித மைந்தாகும் 80

அஞ்சுமகாமை யருளுகிறேன் கேளுமினித்
தஞ்சமுள்ள நல்ல தகுமான தீனேரே 81

ஒன்றுவது நபுசு வுரைக்கிறே னுரூத்தை
மண்ணுவது வெள்ளை வாய்சிபத்துப் பேச்சாகும் 82

முழங்குகின்ற வாயிருப்பு முகம்மதி றசூலாகும்
விளங்குகின்ற தோலதுதான் வேத முகம்மதுவாம் 83

சரி அத்துப் பீர்சாது சைகுபகீர் தீனுகும்
சரி அத்துத்திக்கீர் ஜல்லிஜாத்துப்பன்னிரண்கி 84

உள்ள தல ம்பின்கொம்பை யுரைக்குகிற னிவ்வுடலில்
உள்ள தலம் பல்லக்குத்தி யுயருங்கொம்பு நாக்காகும் 85

கரிகத் திரண்டாவது சாற்றுகிறேன் மலக் கூத்தை
தரிகத்துத் தண்ணீராம் தண்ணீர்நிறைஞ் சிவப்பாம் 86

தரிகரித்துலௌவா ரத்துத் தானதுகண்ணாகும்
சரிகத்தும காமற் றுனரசு ஈசர்வாம் 87

ஈசா நபிதமக்கே யேவல்செய்வோர் மீக்காயில்
கூசா தினிமேற் கூறுமொழியைக் கேளும் 88

தரிகத்துச்சதையாகுந் தன்னுறுதிதானாகும்
தரிகத்துத் திக்கிர்கல்வி தானெழுதும் ஆருகும் 89

உள்ள தலம் பின்கொம்பை யுரைக்குறேனிவ்வுடலில்
உள்ள தவங் கறுப்பீரல் உயர்கொம்பு கண்ணாகும் 90

அகீகத்து மூன்றுவ தருளுகிறே னிவ்வுடலில்
அகீகத்துக்காற்று மதனிறமும்பச்சையதாம் 91

அகீகத்துமுதலீமா னறைகிறேன்ஜெபறாத்தை
அகீகத்துமூக்காகும் அரசதற்குமூசாவாம் 92

மூச நபிதமக்கு முன்னப் பிசுறுபீல்
காசாவா யிருப்பரென்று கற்றோர்கள் சொன்னாரே 93

அகீகத்தெலும்பாகு மானதொரு றாகியதாய்
அகீகத்து வீட்டி லருள்கலிமா நாலெழுத்தாம் 94

உள்ள தலம் பின்கொம்பை யுரைக்குகிறே னிவ்வுடலில்
உள்ள தலம் நுரையீர லுயர்கொம்பு மூக்காகும் 95

மகரிபத்து நான்காவது வழுத்துகிறே னிவ்வுடலில்
மகரிபத்து நெருப்பா மதினிறங் கறுப்பாகும் 96

மகரிபத்து வீட்டின் மன்ன ரிபுருசிம்நபி
துகளில் நபிக்குத் தூதிசுறுயீலாம் 97

முழங்குகினறபீர்காதிர் முகியித்தீ னுண்டவரின்
தழங்கும் குணத்தைச் சாற்றுகிறேன் கேளுமினி 98

காதிரிய்யாய் சிற்று கலிமாவில் ரெண்டெழுத்தாம்
காதிரிய்யா மேலக்கூத்துக் கண்ணிற் கடங்காது 99

உள்ள தலம் பிற்கொம்பை யுறைக்குறே னிவ்வுடலி
னுள்ள தலம் பித்தாகு மூயர்கொம்பு காதாகும் 100

லாகூத்தெனுங் கொலுவுல் நன்மையல்லால் வேறில்லை
லாகூத்மக்காமை நன்றுரைப்பேன் கேளுமினி 101

அஞ்சாவது வீட்டை யடைகிறேன் ஐயாகுந்
றுஞ்சாத றாக்குத் தூறு அமாமலக்கு 102

ஐந்தாவது வீட்டிலருள் கலிமா வென்றாகும்
ஐந்த நபுசதுதங் ஞசாய்ந் தாமரைக்காய் 103

நெஞ்சி ல்றிவிரால் நிற்குங்கொம்பு மூளையதாம்
வஞ்சக மில்லாத வல்ல பெரியோ ரறிவார் 104

மூளையொடு றாகிருந்து மூச்செறியு மங்கமெல்லாம்
பாழான நித்திரையிற் பலநினைவங் கில்லாமல் 105

காலா லுயர்த்திக் கலிமா வுருவானல்
மேலான நோக்கம் வெளியாகு நம்முன்னே 106

வாகுபெரும் லாகூத்தில் வழுத்துங் குருச்சொற்படியே
சாகமுன்னேதானே தன்னை யறிந்துணர்வீர் 107

காமில் மொழியதனைக் கனவில் மறவாதே
பூமி யுவக்காதே புலைகொலைகள் செய்யாதே 108

நினைவைக் கலிமாவில் நிறுத்திச் சுசூதுசெய்தால்
கனவு நினைவாகுங் கண்டபொருள் மெய்யாகும் 109

அஹ்மதெனுங் கண்ணடி யழகிய கல்பாகும்
முகம்மதுதெரிசனைதான் முற்றிலுமே பெற்றிருப்பீர் 110

குருவின் மொழியதனைக் குறிப்பாய் மனதிருத்திக்
கருவா லெழுப்பிக் கமலத்தழுக் கறுத்து 111

முழித்துத் தனித்திருந்து முருகிபாத் தாஹுகி
வழுத்துங் குருமொழியை வாசி தனிலேற்றி 112

ஞாபகமாய்க் காலதனால் நன்று யுயர்த்திக்கொண்டு
பாவகமா மேல்வாசற் பணிந்து சுழிமுனையின் 113

மேல்வாசற் பார்த்துவந்தால் மேலோ ளொளிதுலங்கும்
பரல்வகையா ருண்மையிதை பற்றித் தொடர்ந்துகொள்வீர் 114

சார்ந்த சரந்தனிலே சரத்தை யிழுத்தடைத்துக்
கூர்ந்தனினை வோடிருந்தார் கூற முடியாது 115

தீதா றுவாசற் றிறக்குங் குருவருளால்
ஆராதரந் தாண்டி ஆகூத்தைப் பார்த்து வந்தால் 116

காலனுமே வாரான் காட்சிமிகத் தான்காண்பீர்
உலகினுள்ள வாழ்வு மொருகோடியிற் போய்விடும்பார் 117

அலைந்து திரியாமல் அசதிருகையுந்தள்ளி
மெலிந்தவர்போ லென்று மேதனியிலே யிருப்பீர் 118

மேவுமுகத் தாட்சியையும் வெடிசிரிப்பையுந் தள்ளி
யேவ லெடுத்தாட விழுக்கார் விலகல்விடு 119

தீனையுவந்து திருக்கோணஞ் சென்றேயி
மானை நிலைநிறுத்திமயிகோலங் கொண்டிருப்பாய் 120

தானவனுமொன்றுனாற் சலிப்பொன்று தானுமில்லை
தேனை மிகஅருந்தித் தெவிட்டாம லுண்டிருப்பீர் 121

ஏவல் தனையகற்றி யேவல்க ளெடுத்துக்கொண்டால்
சாவுகடனுகுஞ் சஞ்சலமுந் தீராது 122

ஆளுவது தானரக மைஞ்ஞூறென வருடம்
வீழுவது திண்ணமென்று வேதாம்பர் தாமுரைத்தார் 123

சாகமுன்னே நீங்கள் தென்பாவைத் தேடிக்கொள்வீர்
லாகுபெற நீங்கள் மனதிற் றெளிந்துகொள்வீர் 124

முத்திகவிமாவதல்லால் மொழியவே றொன்றுமில்லை
சத்தியமாய்ச்சொன்னேன் றவிராதீர் கலிமாமை 125

மூமீன்றனக்கு முறையிதுவே தானுகும்
ஆமினல்லவாமி னறிந்தே தவம்பெறுவீர் 126

புத்திகெட்டு மானிடமே பிழைமோசம் போகாமற்
பற்றியெழு மூச்சை பரம்பதச் சேர்த்து 127

நித்தமுங் கலிமாவை நினைவி லுவந்திருந்தார்
செத்த வுடலுயிரும் சென்மக்கனைச்சேரும் 128

உற்றுணர்ந்து யார்த்தா லுனங்கமெல்லா மோரொளிவாய்த்
தத்துவமு மேறுஞ்சீர பலமுமுண்டாம் 129

அல்லா றசூல் யவனொளிவிலே பிரித்து
மல்லார் புவியனுப்பி வல்லோன் றனைவணங்க 130

பொல்லாக் குபிரகற்றிப் புகழ்கலிமா வுவந்திருக்க
அல்லாவின் றாத ரறிவித்தார் தீனோர்க்குத் 131

தீனிசுலாமாக்கிச் செங்கோலுந் தானிறித்தி
யாணியது பூட்டி யானதொரு கியாமமட்டும் 132

தானே யரசாளத் தானவனுண் டாக்கிவைத்தான்
நாமான நற்கலிமா நழுவாம லெந்நாளும் 133

முறுக் கிபாத்த னுவந்து முழித்துத் தனித்திருந்து
பராக்கில்லாமல் நீங்கள் பரிவுடனே யெந்நாளும் 134

அஞ்சொகுத்து நீங்க ளன்பாய்த் தொழுதுகொள்வீர்
தஞ்சமுட லெந்நாளுந் தானவனைப் புகழ்ந்திருப்பீர் 135

அழுகையில்லாத் தொழுகை யாற்றை யடுத்தமரந்
தொழுகையில்லா முரீது தோப்பில்லாக் கனியதுவாம் 136

ஆனதால் நீங்க ளறிந்துதவம் பெற்றாக்கால்
பூனரையார் மாதருறும் புகழ்சுவர்க்கங் கிட்டுமென்றார் 137

திறைதிறந் தெந்நாளும் தீன்கலிமா வுவந்திருப்பீர்
முறையறிந் துணர்ந்தவர்க்கு முறியா தொலுவாகும் 138

மறையறிந்த திண்ணமதில் மவுகூது வந்திருந்தால்
மறையேவல் நினைவுவந்தால் மவுகூது தொழுகையதாம் 139

குறைவில்லாச் சோதிதனைக் கூடிக் கலக்குகின்ற
முறைகலிமா மூச்சானால் முறியாத நோன்பாகும் 140

பேச்சுமிகு மூச்சும் பிரியக் கலிமாவானாற்
காட்சிநித முண்டாகுங் கலிமாவு வந்திருக்க 141

அசையா நீமோனு மாதியொளி பிறக்கும்
பிசகா துடலுயிறும் பிரியா தொருநாளும் 142

ஆச்சரிய முன்கபறி லரம்பைமா ரருகிருந்து
வாய்த்தமுதுப் பொன்மாலை மடவார்கடான் முடித்து 143

ஆச்சரியமா யுவந்தே யடிபணிந்து கால்கழுவி
கூச்சமற்றுப் பொன்மாதர் கூந்தலாற்கால் துடைப்பார் 144

இந்தநல்ல பொற்பதிதா னெல்லோர்க்குங் கிட்டாது
சிந்தைக் குபிரகற்றித் தெளிந்தவர்க்குங் கிட்டுமென்றார் 145

பொய்த்துனி யாவைநம்பிப் பொன்னால கிழக்காமல்
மெய்ப்பொருளைப் பார்த்து விரும்புவீர் தீனோரே 146

சக்கில்லை சொன்னேன் சார்ந்துகொள்ளு நந்தியைத்தான்
பிக்கிரி லாகாமற் பீர்மா ரிடஞ்சேரும் 147

பெற்றவர்க்குப் பேறு பெறாதவர்க்குப் பேறில்லை
கற்றுணர்ந்த போதில் கற்றோ னிவனவனாம் 148

எட்டி லெழுதவொண்ணா தெண்ணவொண்ணா திவ்வுடலும்
நாட்டிவைத்தா னோரலிபர் நாட்ட முஹம்மதுவாம் 149

சத்தியமாய்ச் சொன்னேன் தவிராதே யிக்கலிமா
யெத்திசைக்குப் போனாலு மிவ்வறிவு கிட்டாதே 150

கல்லா மனங்கரையக் கருதினேன் தீதாறைத்
தில்லாறு வந்துதந்தத் தீனை மகிழ்ந்திருப்பீர் 151

மறையைப் புதுத்துறப்பா மகரிபத்தாற் பிரித்துரைத்தேன்
இறப்பும்பிறப்பில்லானை யெழுமூச்சிக் காண்பதல்லால் 152

ஒய்வில்லா மூச்சதனால் ஒருவனைத்தான் காண்பதில்லை
சாவெல்லா வொருவனைத்தான் சாத்திற் றெளிந்துகொள்வீர் 153

புத்தியுள்ளபேர்க்குப் போதுமிந்த நல்லறிவு
புத்தியில்லாதார்க்குப் பூக்கா தொருநாளும் 154

அடிமுடியுமதே யாணுமது பெண்ணுமதே
துடியுமது கலைபாயுந் துண்டமதோ டேழாகும் 155

பிண்டமதுமூலம் பிரணவமுந் தானாகும்
அண்டமதே அகார மாநந்த யீடாகும் 156

காபிர் மறதியதாங் காமில்நினைவாகும்
தாபாமுங் கல்பாகுந் தன்மூச்சுப் பாலமவாம் 157

பேச்சதுதான் வகாரம் பெருமூச்சு உகாரமதாம்
காட்சியது சிகாரங் கடுங்கேள்வி மகாரமதாம் 158

தீனே நினைவறுவாந் தீன்துனியா நடப்பாமீ
மானே கலிமாவாம் மவுசூது ஹக்காகும் 159

ஒலுவிற் பறுல்நான்கு முவந்தபத்துச் சுன்னத்தையும்
ஒலுமுறிச்சல் நாலாறை யிறைக்குகிறேன் கேளுமினி 160

தொழுகையின் பறுலு சொன்னார்பதினைந்தனுவாம்
தொழுகையின் சுன்னத்துச்சொன்னார் நாலெட்டதுவாம் 161

தொழுகையின் முறிச்சல் சொல்லிருபத் தோர்நான்கு
கழுவுங் கல்புத்தொழுகை காமிலைக் கேட்டுக்கொள்ளும் 162

தாத்து சிபத்துந் தன்னுட லுயிராகுந்
தாத்துமது ஹக்காகுஞ் சிபத்து மூஹம்மதுவாம் 163

மவுனமது வாகியதாம் வாலையது றாகாகும்
புவனமது ஜடலம் புகழ்தலமும் பொற்குருவாம் 164

ஆணமது பெண்ணுமது அல்லாஹு முஹம்மதுமீ
மானுமதுமேதனு மருவுத்தெளிந்துகொள்வீர் 165

நினைவுகயாத்தாகும் நீண்மறதி மவுத்தாகுந்
தவன மணுகாமற் றுன்பார்த் தறிந்துகொள்வீர் 166

ஆதி யஹ்மதுவா மனுதி முஹம்மதுவாஞ்
சோதி நமதுயிராஞ் சுரூபஞ் சடலமதாம் 167

சந்தி முஹம்மதுவாம் நாதமதே ஹக்காகுஞ்
சந்தி முஹம்மதுவாஞ் சமுத்திரமுங் கல்பாகும் 168

முரீதுமொரு நாட்டமுறுசிதுவே தேட்டமதாம்
முரீதுபீர் றாகாகு முஹம்மதுவே ஹக்காகும் 169

சாகாத காலதுதான் சாற்றுஞ் சரமாகும்
வேகாத தலையதுதான் வெற்றியுள்ள றாகாகும் 170

ஏகனிருப்பிடந்தா னிரவுபகலற்றவிடம்
வாகுகொள் சாமுயிராம் வஜ்த்துடல் மவுத்தாகும் 171

மக்கமது கல்பாகு மதீனம் புருவத்திடையாம்
சொர்க்கமது நெஞ்சஞ் சுடுநரக மும்தீயின்கீழ் 172

அறுசு கழுத்தாகும் அறியுந் தலைகுறுசாம்
விரிவார் கயாத்து விளங்குகின்ற தம்மதுவாம் 173

எழுவான் சிரசாகு மெழுகடல் வயிறாகும்
எழு பூமியின்விபா மெழுமூச்சுத் தானாகும் 174

முழுக்கி னழுக்கறுதல் முழுகிவரும் வாஜிபதாம்
மூழிக்கின் றுறையதுவே மோசமில்லை யெப்போதும் 175

ஹறுமும் மத்தியதாம் ஹலாலும் நினைவாகும்
முறுதுகல தாத்தாகும் முஷாகிதாக பத்தாகும் 176

தாத்துமது ஹக்காகும் சிபத்து முஹம்மதுவாம்
எற்றமது தம்மாகு மேக வெளியதுவாம் 177

அகது உகதாகும் அஹமதுவு முஹம்மதுவாம்
புகழ்போக நினைவாகும் பூரண முயிராகும் 178

ஜலாலுஞ் ஜமாலுக் தானவனுந் தானுகும்
காலுங் கருமுங் கண்மூடி முழிப்பதுவாம் 179

ஆத்முயிராகும் ஹவ்வா ஜடலமதாம்
வேதமு நாவாகும் விளங்குங் கண்ஐயனுகும் 180

மீமு முஹம்மதுவாம் விளம்பினே னறிந்துகொள்வீர்
லாமுஞ் சிபுரீலாம் நாயகன் அலிபாகும் 181

சீமுமஜா சீல்வழியாம் செப்புவேன் பின்னுலே
கேமமிதுவே நிச்சயமாய்ச் சொல்லுகிறேன் 182

பொக்கிஷமு நாமல்லவோ புகழுவது நம்மையல்லோ
மிக்க முறைமிதுவே மெய்யா யறிந்துகொள்வீர் 183

அலிபென்ற வச்சரத்தா லால் மடங்கலையும்
பலிதமுயி ரெவ்வெவையும் பரம னனித்துவைத்தான் 184

அலிபென்று மோதுவர்க ளதையுமுரு வாக்கார்கள்
கலிமா நினைவுவந்து கருத்தாளி யாகார்கள் 185

மாதவங்கள் தானறியார் நாயகனைத் தானறியார்
நாதமறியாதார் நாயகனைத் தானறியார் 186

நினைவை யறியாதார் நித்திரையைத் தானறியார்
மனதை யறியாதார் மாதவத்தைத் தானறியார் 187

காட்சி யறியாதார் கத்தர்தனை யறியார்
பாச்சிடுங் கோதிச்சிறைப் பழுக்கும்ப்போ கல்பதுதான் 188

ஆச்சரிய மெத்த ஐனையறிந் துணர்ந்தால்
காட்சிநித மூச்சினிற்றுன் கலிமாவு வந்திருங்கோ 189

ஜினை யறிந்துணர்ந்தா லாதியைத்தா னறிவீர்
ஜினை யுணராவிடிலோ அதாபுக்குள்ளயாவீர் 190

ஹறுமை யுவப்பீரேற் கடுநரகஞ் சேர்வீரே
மிகுறுசு பெறவென்றால் மிக்ககலா லுவந்திருப்பீர் 191

உந்தன் மனைவியிடத் தொலியசனா விருக்கு
மெந்தவித மானாலு மேகன் கலியுவக்காதால் 192

சொந்த மனைவிகளும் சுனுபுமது நீங்காது
யெந்தவித மூழ்கினுமே யிறங்கா தவர்முழுக்கு 193

முழுக்கு விதிக்குமுன்னே முழுக்கறுக்க வேண்டுங்கண்டாய்
முழுக்கு விதித்தாலோ முழிக்கவே முடியாது 194

முழுக்கை யறியும்வகை மொழிகிறேன் கேளுமினி
முழுக்கு விதிக்குமுன்னே முன்னோன் கலிமாவுகந்தால் 195

அழுக்கை யகற்றிவிடு மமுதமுண்ணு மானிடரே
முழுக்கவும் வாஜிபினால் முழுதுமே தூயதாகு 196

வழுக்கறவே யூதிவிடும் வடிவுகண்டே யோடிவிடும்
பழுக்கு மொளிவுதங்கும் பாசமதே யற்றுவிடும் 197

முழுக்கு விதிக்குமுன்னே முழுக்கறுவித மிதுதான்
வழுத்துகின்றே னின்னமொன்று வகையுடனே யறிந்துகொள்வீர்

கலிமாப் பிழையானால் கருமான தொழுகையதாம்
கலிமாப் பிழையானால் கருமான செயற்கையதாம் 199

கலிமாப்பிழையானால் கருமான பிள்ளையதாம்
கலிமாப் பிழையானால் கருமாகு மெந்நடையும் 200

பலியா திவன்வணக்கம் பகையாய் முடிந்துவிடும்
பெலியான ஜாசீர்க்குப் பொருந்தோழன் றானுவான் 201

பலிகேடாகிப் பாழ்நரகிலே விழுவார்
கலிமாவுருவானால் கலாலாகும் பிள்ளையுமே 202

இலகு மதபுநெறி யெழில்மிகவு முள்ளவனும்
கலகங்கள் விலனாய்க் கருமான தைந்துவகை 203

விலகல்தனை யின்னம்விளம்புகிறேன் கேளுமினி
கலாலான மங்கையர்க்குக் கருமான தைந்துவகை 204

வளர்வருட மாதப்பிறப்பில் வளர்பிறை முதனாளும்
வளரு மம்மாவாசிரவு மங்கையிலாகு மங்நாள் 205

வந்தவொருநாள் தனிலே மங்கையரைச் சேர்க்கைசெய்தால்
அந்தங்குறைந்துவிடும் அல்லா முனிவிறங்கும் 206

முன்னுள்ள முதல்குறைந்து மூதேவியால் விடுவார்
வின்னமது சொன்னேன் விரும்பாதே தோஷம்வரும் 207

விந்து நிலையறிய வீணரேகேளுமினி
சொந்த மனைவியின்றன் சோபந்தெளியர்தால் 208

உந்தன் மனைவியாசை முன்மேற்கடனாகும்
உந்தனுடலில்நாற்றமுள்ளும் புறமுமுண்டாம் 209

சந்தாபமில்லையது சாற்றுகிறேன் கியாமத்திலே
கொந்தமீன் போலும் கொய்மெழுகா உருகுஞ்சடலம் 210

கிரகமது பிடித்து கீழ்நரகத் தேயாழ்வார்
பெரியதினமொன்று பேசுகிறேன் கேளுமினி 211

நாளைகியாமத்ததிலே நரியாரை தோளேற்றி
மாலைநெருப்புச்சட்டை மார்புதனிற் பூட்டிருக்கும் 212

பாலங்கடக்கப் பலமா தாவில்லை
காலமலக்குவந்து கடிந்து நடந்திடுவார் 213

ஆகையினால் நீங்களறிந்துகொள்வீரில்முனிசா
ஓசைப்படி பெண்சோப மொழிக்கும்வகை கேளுமினி 214

மானுதர்தமக்கு வளரும் விந்தைந்து மூன்றுதலம்
தானாக தானத்தில் விந்துதான்வந் திறங்கிடுநாள் 215

தேறும்பிறை யெட்டாநா ளிறங்கும்பிறை யிருபதிலே
கூறுள்ள வாவுதனிற் குதிகொள்ளுங் கண்டறிவாய் 216

பாவகமா நீங்கள் பலஞ்செய்யுங் காலந்தனில்
வாவுாகு மானி மறைக்முன் குதித்துவிழும் 217

ஆசையது தீர்ந்துவிடு மானடிமை தானவாள்
பாசமது தீர்ந்துவிடும் பைங்கிளியுந் துய்தாவாள் 218

தோசமது வாராது சொர்க்கப் பதிபெறுவாள்
நேசத்தோடே யிதனை நிண்ணயமாகக் கொள்வீரே 219

மூமீன்றனக்கு முறையிதுவே தானாகும்
ஆமினல் லாவமீ னறிந்து தவம்பெறுவீர் 220

மார்க்க மறியாதார் வன்னகரஞ் சேர்வர் திண்ணம்
மார்க்கந்தவறாமல் வண்கலிமா முன்னிருத்தி 221

தீர்க்கமதா நீங்களுமே தினமுமதுலாகி
மூரக்கக் கலிமாவுவந்து முழித்துத்தனித்திருந்து 222

வழுத்துங் குருமொழியை மனதில்கபூ லாக்கிக்கொள்ளும்
வெழுத்திலிபு வோரெழுத்து வெளியந்து தோற்றுங்கண்டாய்

வழுத்துகிறே னின்னமொன்று மாற்றான் செயலதனை
யிழுக்கனிபு லீசாசன் யேழை யியம்புகிறேன் 224

எழு தலத்தி லிபுலீ சிருந்துகொண்டு
பாழ்படுத்தானதனைப் பார்க்கிலையோ மானிடனே 225

கண்ணாவது கெருடன் காதாவது பாம்பு
முன்மூக்கு வண்டாகும் முழங்கும்வாய் நாயாகும் 226

கையாவது குரங்கு காலாவது கழுதை
துய்யகுலாநபுசு துட்டனிருக்குநதலம் 227

இந்தப்படியேதா னிபுலீசு வுங்களையும்
அந்தமுள்ள கலிமா வதனைவெறுப்பாக்கி 228

ஆண்டவன்ற னேவலதனைமறக் கடித்துப்
பாண்டனிபு லீசனிவன் பாழ்வலையி னுள்ளாக்கி 229

க்ண்ணிலிருந்துகொண்டு கறும்பார்வையே பார்ப்பான்
கண்ணா வதிசாவவர் கையேவல்லீக்காயிவ் 230

விண்ணமதுகண்டு விலகிதுவாச் செய்வார்
என்னுஞ் சொர்க்கவோசை யேகேட்குங் காதுதனில் 231

காதனிபு லீசிருந்து கறுங்கேள்வியைக் கேட்பான்
காதி விறாகிமவர் கேயே வலிசுறாயீல் 232

ஆதி முனிவுவர வவர்கள் பதுவாச்செய்வார்
ஏதமிலா தீதனை யெழிலா யறிந்துகொள்வீர் 233

மூக்கின் வீசா விருப்பு மொழியுமதீன் மூதேவி
காத்தனிபு லீசிருந்து கறுமான வாசங்கொள்வான் 234

மூசாநபிக் கேவல்செய்வோர் முன்மலக் கிசுறுபீல்
காசினடப்பறிந்தே யவர்கள் பதுவாச் செய்வார் 235

வாயு முஹம்மதின் மலக்குஞ் சிபுரீலாம்
வாயினிட மதிலே வம்பனிபு லீசிருந்து 236

சாயமானதை யகற்றி கருமை யுவப்பச்செய்வான்
மாய நடப்பறிந்து முஹம்மது பதுவாச் செய்வார் 237

கையிலிருந்துகொண்டு கறடனிபுலீசு
துய்ய செயலகற்றித் துன்மார்க்கஞ் செய்துவைப்பான் 238

வம்பன் செயலாலே வல்லோன் முனிவிறங்குங்
கம்பனிபுலீசு காலி லிருந்துகொண்டு 239

காலென்று சொல்கழுத்தை கருமுக்கு முன்னடக்கும்
காலின் றஹமத்திழந்து கடுநரகஞ் சேர்வார்கள் 240

கால்மிருக மானதுதான் கருத்தை யுவந்திருக்கும்
மேல்வினைக் குகந்தவர்கள் வெந்நரகஞ் சேர்வார்கள் 241

ஆனதனுல் நீங்க ளகத்தி லிபுலீசுடைய
மான வழிவகற்றி வாணுளழியுமுன்னே 242

ஈமானிலா று மிசுலாமி லேந்துடனே
நாமான நற்கலிமா நலமாகத் தானறிந்து 243

முரிது தன்னைக்கொண்டு முன்னேனைத் தானறிந்து
சரிஅத்து மகரிமத்துத் தன்னை யறிந்துணர்ந்து 244

வாசிதனில் நாமங்கொண்டு பைத்துல் மகுமூதறிந்தால்
பாச வினையகன்று பரன்பாதஞ் சேர்ந்திருப்பீர் 245

தன்னி லறிவுவந்தால் சைத்தானும் பீராவான்
மன்னுமன நபுசை மறந்துவிட்டு நீங்களுமே 246

அழுக்கறுத்து மெய்யை யறிந்தவர்கள் முன்சென்றால்
பழுதகறுக்க நேர்மைத்தன்னைச் சொல்வா ரறிந்துகொள்ளும் 247

செற்ற பிணம்போலச் சினத்தைத் தவிர்த்துவிடு
மற்றொன்றும் பேசாமல் மௌன முபதேசித்து 248

ஜெகமதிலே கிட்டாது ஞானாறு வுங்களுக்கு
அகமதிலே தெளிந்தே யாசித்து வந்திருப்பீர் 249

தீதாறு பார்த்துவந்தால் ஜென்னப்பதி கிட்டியென்றும்
ஆதாரமாகவொரு வாண்டவன்றீ தாறுகிட்ட 250

ஜடத்தில்வரும் றாகைச் சாற்றுகிறேன் கையுந்தான்
திடமுடைய * றாகுசுல்தான் சென்னதனில் வீற்றிருக்கும் 251

மயிர்தோல் நடுவில் † றாகு மந்திரிதா னுற்றிருக்கும்
இயல்பான கல்பதனி லிருக்கும் ‡ ப்ரதானிறாகு 252

பலமான பீடமதில் பகா () சேவகறாகிருக்கும்
நல்றாகிந் நான்கையுமே நாட்டிவைத்தானங் குருவே 253

திடமுள்ள சுல்தான்செயல் செப்புகிறேன் கேளுமினி
திடமுடைய சுல்தானுஞ் செப்புவான் மந்திரிக்கு 254

இறையேவ லெடுத்துக்கொண்டே யிகழ்ந்துவிடு விலகல்தனை
இறையேவலை யகற்றிட யிடறுர் விலகலெடுத்தால் 255

கலகம் பிடித்துக்கீழ் கவிழ்ந்து நரகமாள்வாய்
வலப்பொருந்து மேவலை மறவாதே நபிசறகை 256

ரண்டாவதி ராஜா நவில்வானம் மந்திரிக்கு
நின்றூட்டமெல்லா நினைத்தபடி செய்யுமென்பார் 257

மூன்றுவதி ராஜா மொழிவாளர்காண் மந்திரிக்கு
வேண்டாத கள்ளுணவு வேசை யுவந்திருப்பான் 258

தீண்டாப் பொருளறிந்தாற் றிடனுதுஞ் சொர்க்கமென்பார்
வேண்டாத சொல்லதனை விரும்பாதே கேடுனக்கு 259

கெட்டசெய லிரண்டுங் கேளாதே தள்ளிவிடு
திட்டமான சுல்தான் சொற் றீர்க்கமுட னீகேட்டால் 260

எட்டாஞ் சுவர்க்கமோ டேகன்தீதார் கிடைக்குஞ்
சட்டமி றசூலுடைய ஷபாஅத்து நீபெறுவாய் 261

ஊர்பே ரறியாத வுலகத்தாரே யுங்களுக்குப்
பேர்கொள் வளமைகளைப் பேசுகிறேன் கேளுமினி 262

---

* றாகு சுல்தானைன்பது றாகுகுதுசி † றாகு மந்திரி யென்பது றாகுசுபுலி ‡ ப்ரதானி றாகென்பது றாகுநாமியா () சேவக றாகென்பது றாகுபறுசுகா.

நீ யாரென்று கேட்டால் ஆதமியா வென்றுசொல்லும்
நீ யாருடைய மைந்தனென்றால் ஆதமக னென்றுசொல்லும் 263

நீயாருடைய வும் ‘த்தென்றால் முஹம்மத ரும்மத்தென்னும்
நீயாரடியா னென்றால் நாயனடியே னென்றுசொல்லும் 264

நீயாருடைய இல்லமென்றால் இபுறூஹீ மில்லமென்னும்
நீயாருடைய கோத்ரமென்றால் இஸ்மாயீல் கோத்ரமென்னும் 265

உன்கிபுலா எங்கேயென்றால் உடையோன் கருபாவைச்சொல்லும்
உன்பிறப் பாரென்றால் உண்மையுள்ள மூமீனென்னும் 266

நீயெந்த வூரென்றால் நிகழ்த்துங் கருவூரென்று
நீயென்ன பிள்ளையென்றால் இஸ்லாமன பிள்ளையென்னும் 267

நீயெப்போ திசுலாமென்று வியம்பும்றூசு மீசாக்கிலென்று
நேயப் பெருக்கோடு நிகழ்த்துமே கேட்டவர்க்கு 268

உன்பேர் ரென்னவென்றால் லுரையு முஹம்மதென்று
உன்பேர் முஹம்மதென்று லுரையுமடை யாளமென்பார் 269

அன்பாக கேட்டவர்க்கே யடையாள நீர்சொல்லும்
என்பெயர் முஹம்மதற்கிங் கெழுத்துநான் குண்டதுகேள் 270

தலையில் அலிபாகுந் தன்புயமும் கேடாகும்
நிலையான மீம்தொப்பூழ் நிகழ்த்திருப் புதலாகும் 271

சந்தாப மில்லாமல் தருமாகவே நீரும்
இந்தநல்ல நான்கெழுத்தால என்பேர் முஹம்மதென்னும் 272

ஈமா னென்னவென்றால் இயம்பும் கலிமாவென்னு
ஈமா னிருப்பதெங்கே யியம்புமெனக் கேட்டால் 273

ஈமான்தான் அச்சத்திற்கும் இச்சை கிடையிலென்னும்
நாமானமாக நடக்குஞ் செயலிதுவே 274

தொழுது வருகிறீரோ சொல்லுமெனக் கேட்டால்
தொழுகை யகுமதென்று தொகுத்துரையு மப்போது 275

எப்படி யருமை தியம்புமெனக் கேட்டால்
அப்போதுரையும் அறிவான நான்கெழுத்தை 276

நிலையே அலிபாகும் நிற்கும் ருக்கூகே யாகும்
நிலைசஜதா மீமாகும் நிகழ்த்திருப்புதலாகும் 277

இந்தநல்ல நான்கெழுத்தா லியம்புநீர் அகுமதென்றே
உந்தன் வணக்கமென்ன குரையுமெனக் கேட்டால் 278

நிலையாம் அலிபும் நீன்றமா வணக்கம்
மிலையுநல் லகேயும் மிருகஜாதியின் வணக்கம் 279

புகழ்ச்சஜதாமீமும் புழுப்பூச்சி வணக்கமதாம்
அகலாத இருப்புதலால் ஆனவலே வணக்கம் 280

மாத்திடைய வணக்கம் வழுத்துகிறேன் கேளுமினி
மாத்துடைய திக்கிர் வழுத்தும் அல்லாகுவென்றே 281

மிருகஜாதியின் திக்கிர் விளம்பும் அல்லாகூவோடு
பெருகும்கை யுல்லாவும் பேசும்காலூறதுவே 282

ஊர்வினத்தின் திக்கிர் உரையல்லாகுமுமீத்து
பேர்பெரு மலேவணக்கம் பேசிகிறேன் கேளுமினி 283

மலேயின் திக்கிர் வழுத்தும் அல்லாகுதாயிமதையான்
நிலேயார் வணக்கமிதே நிகழ்த்துகிறே னன்றுக 284

பஞ்ச வுடல்வணக்கம் பகர்ந்தே னறிந்துகொள்ளும்
அஞ்சுநிலேயு மறையுகிறேன் கேளுமினி 285

ஒன்றுவது தொழுகை யுடையோன் மிகுறுபாம்
ரண்டாவது ஹுகு நாயன் கருபாவாம் 286

மூன்றுவது மகாம்மகு மூறில் முன்னேன் றெழுகையதாம்
நான்காவது தொழுகை நாயன் அறுசுதன்னில் 287

ஐந்தாவது பகும் ஆதிகுருசுதனில்
இந்த நிலேயைந்து மியம்பி னிவ்வுடலில் 288

இந்த நிலேயறியார் இமாமினுக்கு கறுமாகும்
முந்த நபியிறசூல் மொழிந்தாற் குறுஆனில் 289

வெற்றியுடல் வேசிதனே விளம்பினேன் ஹாகாகும்
பத்தியினில் வேசை பகர்ந்தேன் ஜடலமதாம் 290

கள்ளரிற் கொடியகள்ளன் கத்தே னவனுகும்
கள்ளமனதிற் பெரியபொய் கழறினேன் ஜடலமதாம் 291

அன்றன்று செய்தபிழை யைந்தொகுந்துந் தான்றெழுதால்
அன்றன்று தீர்ந்துவிடும் அறியுமிதுதிடனே 292

உகப்பா னுடலி லுடையோனைந்து பஞ்சபூதம்
வகுப்பான ஐவீட்டில் வல்லோ னமைத்துவைத்தான் 293

வன்னியுடன் வாய்வு மண்சலமோ டாகாயம்
திண்ணமா ஐவீட்டில் தீர்க்கமா யாளுகிறார் 294

பஞ்சபூத மொன்றிருக்கும் பங்கதுவு மைந்தாகும்
ஐயைந் திருபத்தைந்தா வானதொரு பங்காகும் 295

பையில் நிறைந்தவகை பாங்குடனே யாவருக்கும்
மெய்யாகச் சொல்லுகிறேன் விவேகமுடன் கேளுமினி 296

மண்ணுடைய பங்கு வழுத்தென்பு நரம்பாகும்
பின்னுஞ் சதைபோல் ரோமம் பேசினேன் பங்கைந்தாம் 297

தண்ணீ ருடையபங்கு சாற்றுகிறேன் கேளுமினி
கண்மூளை நாசதினீர் கண்ணீர் வெயாவைஜலம் 298

காற்றுடைய பங்கு கழறுகிறேன் கேளுமினி
சாற்றுநிலை நடுக்கல் கண்மூச்சுக் கொட்டாவி 299

நெருப்புடைய பங்கு நிகழ்த்துகிறேன் கேளுமினி
நெருப்புப் பசித்தாபம் சோம்மல் நித்திரை வெடிசிரிப்பாம் 300

ஆகாயத்தின் பங்கை யருளுகிறேன் கேளுமினி
வாகா யிருபத்தைந்துபங்கும் வழுத்துகிறேன் கேளுமினி 301

விழுப்பமுடன் ஜீன்கூறை விளம்புகிறே னிப்போது
கற்பக விபரமெல்லாங் கழறுகிறேன் கணக்காக 302

மண்ணுடை கூறும் வழுத்து கனமாகும்
தண்ணீரின் கூறு சாற்றினே னிருமலதாம் 303

விசையான காற்றின்கூறு விளம்பினேன் பேச்சாகும்
அசையா நெருப்பின் கூ றருளினேன் வேள்வியதாம் 304

ஆகாசக் கூறு மருளினேன் பார்வையதாம்
ஆகாச மொன்றி லடங்காத ரூபமதாம் 305

பரம னுடைய பங்கு பகருகிறேன் கேளுமினிப்
பரவும் பார்வைகேள்வி பன்னுருசியோடு மணமாம் 306

பேசுகிறே னிப்போ பெரியோன் சிபத்தனைதயும்
ஆசையறுறாகு அசிலுமே யிப்போது 307

வாச்சிது நம்முடலில் மனதி லறிந்துகொள்ளும்
காட்சியாகும் மிதனைக் களிப்போ டறிந்துகொள்ளும் 308

ஆமரன் வள்ள லரிய நபிசிபத்தும்
ஈமான் பிசுமிலாம் இசைதௌகீத் மகரிபத்து 309

நாட்டினா னம்முடலில் நாமறிந்து வணங்குதற்கு
மூட்டுகின்ற சீர முப்பத்திரண் டங்குலமாம் 310

பூட்டினான் மூச்சைப் பொங்கமுட னிரவுபகல்
ஈட்டினா னிரவுபகல் இருபத்தோ ராயிரத்தறுநூறும் 311

இரவும் பகலாக விலங்கவே கற்பித்தான்
துறவு தெரியாமல் துஞ்சுகிறார் மானிடர்கள் 312

துய்ய கலிமாவைத் துரிசாக மூச்சேற்றிப்
பையவே கண்டமதிற் பாங்கறிந்து தானடந்தால் 313

துய்ய அகுமதையுந் துரிசினால் நீ காண்பாய்
பைத்துல் முக்கத்தீசு வளர்ந்தபுரு வத்தினியை 314

ஆதமலை யறபாத்துமலை யருளுகிறேன் கேளுமினி
ஆதமலை யறபாத்துமலை யறிய சிரசாகும் 315

வேதமலை பொன்னின்மலை விளங்குகின்ற கேள்வியதாம்
வேதமலை பொன்னின்மலை விளங்குகிறேன் கேளுமினி 316

வாசமலை வயிரமலை வழுத்துகிறேன் கேளுமினி
வாசமலை வயிரமலை வழங்குகின்ற பார்வையதாம் 317

இருளின் மலையதனை யியம்புகிறே னிப்போது
இருளின் மலைதானு மெழுமூச்சுத் தானாகும் 318

உந்தன் முரீசை யுரையுமெனக் கேட்டால்
எந்த முரீதுநாட்ட மேக னுவப்பாகும் 319

மூரீதுமா ரென்னவென்றால் மொழிவாய்நீ றாகதுதான்
முராஜாத்த தென்னவென்றால் மொழிவாய்நீ புத்தியென்றே 320

தாலிபு என்னவெனறால் சாற்றுங் ஜடலமென்று
தாலிபு முரீதும் தாத்தும் சிபத்துமதே 321

தாத்தும் சிபத்துந் தன்னுட லுயிராகும்
நேத்திட னிதனை நிச்சயமாகக் கண்டுகொள்வீர் 322

தாயுடைய பங்கைச் சாற்றுகிறேன் கேளுமினி
தாயுடைய பங்கென்பு சௌரோமம் நரம்பு 323

தகப்பனின் பங்கு சதைமூளை தோலிரத்தம்
தகப்பனின் பங்கு சதைமூளை தோலிரத்தம் 324

ஞானமணி வாசல் நவிலுகிறேன் கேளுமினி
ஞானமணி வாசல் நலமான நபுசுத்தலம் 325

ஞானமணி வாசல் நலமான புருவத்திடை
ஞானமனி வாசல் நலமான நெற்றியதாம் 326

உச்சியது மக்கம் உயிர்முஹம்மது தாமாகும்
இச்சையுட னிதனை யெழிலா யறிந்துகொள்வீர் 327

தூண்டா மணிவாசல் தூரிசினு நுக்கதாகுங்
கண்டாமணி ரூபங் காட்சியது தானுகும் 328

கருபாவது நான்குங் கழறுகிறேன் கேளுமினி
கருபாவுந் தாமரைக்காய் கருத்தா லறிந்துகொள்ளும் 429

மதினமது நெஞ்சு வழுத்துகிறேன் கேளுமினி
மதினமது நெஞ்சு வழுத்துகிறேன் நேர்ந்துகொள்ளும் 330

மக்கமதை நன்றாய் வழுத்துகிறேன் கேளுமினி
மக்க மதுதான் வளருகின்ற கல்பாகும் 331

ஆதத்தை படைத்தவகை யருளுகிறேன் கேளுமினி
ஆதநெறியுள்ள ஐந்துவகை மண்ணுகும் 332

பாடுமுழங்காலளவும் பாரிலுள மண்ணுகும்
துடையாவும் கௌலல் கவுதற் றுய்யகுளத்தின் மண்ணுகும் 333

நாபியிடையளவு நரகத்து மண்ணுகும்
மேவு சொர்க்கமண் தான் மேல்வயிறு தானுகும் 334

கண்டத்தின் நெஞ்சளவுங் கத்தன் அறுசுமண்ணும்
மண்டையைக் குறுசுமண்ணுல் வகுத்தானே யாதியுமே 335

வலிய அலிபுநிலை வளர்ந்த புருவத்தினிடை
மெலியாத பேதேயும் விளங்குமிரு புருவம் 336

மற்றெருதே நெற்றியதாம் வழுத்துகின்ற ஜீம்தலையாம்
வெற்றியுள்ள கேய்ரண்டும் விரும்புமிரு தோளாகும் 337

தாலிரண்டுந்தானே தரித்தமுழங்கா லிரண்டாம்
மாலூற்ற சேயும் வழுத்துமிரு லிலாக்குடையாம் 338
சிபிரண்டுந்தானே சிறந்தவிரு பீர்பாகும்
தேகமுள்ள சாதுலாதும் திருக்காதிரண்டாகும் 339
சொன்னதொரு தேவேயுந் தொக்கு மிருகரண்டை
வன்னமுள்ள ஐன்கைனும் மலரு மிருகரமாம் 340
பெருக்கமுள்ள பேகாபும் புரக்கையிரு கட்டாகும்
முருக்கமுள்ள காவும் முதுகந்தண்டு தானாகும் 341
தீர்க்கமுள்ள லாமும் சிறந்ததுடைப் பொருத்தாம்
நீக்கமிலாமிமூ நெஞ்சமுதன் மூளையதாம் 342
அறிவுடைய நூனும் ஆகு நூகுமகாமே
பிரியமுள்ள வாவும் பேசினே நுந்தியதாம் 343
இன்னமொருகேயு மிலங்குகின்ற கல்பாகும்
அன்புள்ள லாமலிபும் அம்சாவு மூச்சாகும் 344
மானிடரே றாகு வந்தவகை நீர்கேளீர்
தானே யொருநுகத்தாற் சகலமுந் தானாகும் 345
அலிபுக்குக் கீழ்மேலால் அடுத்திருக்குஞ் சூழ்ச்சமது
வலியலாமும் அலிபும் வகையதுவுங் கீழ்மேலாய் 346
மாற்றிப்பிடிக்க வகையறியா மானிடர்க்குட்
டோற்றும் பதினுன்குலகுஞ் சூரியனுஞ் சந்திரனும் 347
வந்த விதிமுறையால் மதகமெல்லாம் பாழாச்சு
அந்தவிதத்திலொரு அணுமாத்திரம் புவியில் 348
வாயினல் மானிடர்க்கு வகைவிபரஞ் சொன்னுக்கால்
ஓயாப் பெருங்கவலை யூணுறக்க மற்றுவிடும் 349
துனியாவை நம்புகின்ற தோசியர்க்குக் கிட்டாது
அநியாயப் பாவிகட்கு மணுவளவுஞ் சொல்லாதே 350
மண்ணி னபுசுதன்னை மறந்தவர்க்குச் சொன்னுக்கால்
திண்ண மதுவாகுந் நீதாறுதான்கிடைக்கும் 351
சாலமதை யறிந்து சாத்தில் கலிமாவுவந்தால்
கோலமது கொள்ளுங் குதாயி னெளிதுறங்கும் 352

பீமமுடன் லாமலிபை விரைந்தசரந்தொடுத்தால்
காமீனுயோகும் காண்பாய் குதாவொளிவை 353

பஞ்சபூத மைந்ததனுர் பகையுந்தான் கூடாது
மிஞ்சும்வகையிதுவே மேலான நல்வழியாம் 354

வருஷமது நம்முள்ளே வழுத்துகிறேன் கேளுமினி
யொருவருட முந்நூற்றறுபது நாளாகும் 355

முந்நூற் றறிபதுநாள் மொழிந்தநல்ல மாங்கிஷமாம்
முந்நூற் றறுபது நரம்பாய் முதல்வனுண் டாக்கிவைத்தான் 356

முந்நூற் றறுபதுண்டு தோள்முளியா முண்டாச்சு
முந்நூற்றறுபது முழியுமொரு முன்மலைக்கே யீடாச்சு 357

முந்நூற்றறுபதுமனுயு முந்நூற்றறுபது நரம்பாம்
முந்நூற்றறுபது நரம்பு முளைக்கின்ற பூண்டாச்சு 358

முந நூற்ற றுபது ரோம முளைத்தெழுந்த புற்பூடாம்
முந்நூற்றறுபது பிஞ்சு முந்நூற்றறுபது கொத்துகளாம் 359

உருவமதிற்கிணையாய் வல்லோ னமைத்து வைத்தான்
கருதவும் கூடாது கணக்கிலு மடங்காது 360

சடத்தினதிசயங்கள் சாற்ற முடியாது கண்டீர்
கடலி னதிகமது கத்தன் குறுஆனிற் சொன்னுன் 361

நடப்புள்ள பாதையைத்தா னவின்றேன்கா ணுங்களுக்கு
நடவா முறைகளைத்தா னுட்டவில்லை இப்போது 362

ஆதமது தம்மாகும் அவ்வெழுத்து மூன்றுகும்
ஆதமென்ற மூன்றெழுத்தும் அவ்வுஉவ்வு நவ்வாகும் 363

அவ்வு உவ்வு நவ்வும் ஆகூவுதானுகும்
செவ்வுஆகூவும் செப்பாதி முச்சுடராம் 364

முச்சுடரானதுவு மும்மண்டலந் தானுகும்
இச்சையுட லீலதை யியம்புகிறேன் கேளுமினி 365

ஐம்பத்தோ ரட்சரமா யாண்டவ னமைத்துவைத்தான்
சம்பத்ததனின் தகுதியினைச் சொல்லுவேன்கேள் 366

ஈரசையுந் தானரதனி லெழுத்துமது நான்காகும்
வீறுள்ள மூலமதில் விளம்பினே னுன்கெழுத்து 367

கூறான நாவுதனிற் கூறுமொரு பத்தெழுத்து
தாறான முக்கோணமதிற் றறிப்பித்தான் ரண்டெழுத்து 368

பேறான கலைதனிலே பேசும்பதி னாறெழுத்து
நேரான பேச்சாட்டமதி நிறைத்துவைத்தான் ரண்டெழுத்து 369

மார்க்கமுள்ள குருப்பரத்தின் மறைத்துவைத்தா னோரெழுத்து
தீர்க்கமுடன் பன்னிரண்டைச் சென்மத்திற் செம்மவைத்தான் ()

தச்சில்லா மாளிகையின் தானவ னொளிந்துகொண்டான்
நிச்சயமாத்தானே நிகழ்த்துகிறேன் கேளுமினி 371

ஒளித்தவனைக் காண ஒருவரால் முடியாது
பழுக்கவே யோதிப் படியேறிச் செல்கவென்றால் 372

ஏணிப்பழுவறுத் தாலேறிச்செல்வ தெந்தவிதம்
ஆணிகலி மாப்பிடியா லசையாமற் றானிறுக்கி 373

ஏரியங்கே பார்த்தா லேகனுட தீதாறும்
பேறிதுவே றென்றே பேசுவார் வீணர்களே 374

மெய்யான நற்பொருளை வீணாக்கி விட்டுவிட்டுப்
பொய்யிலே யுன்மனதை பூட்டுவான் முழுக் குருடன் 375

கூறுகின்ற விம்மொழிதான் குருடன்கை கோலாகும்
ஆண்டவர் கூட்டமதி லாவார்கள் தீனோரே 376

ஆசையது சொன்னே னகற்றியே தள்ளிவிடும்
பாச வினையநலப் பார்த்துத் தெரிந்துகொள்ளும் 377

தெண்டித்த பேர்கள்தம்மைத் தேடிப் பிடித்துக்கொள்ளு
கண்டிதமாய்ச் சொன்னேன் காப்பாய் குருபதத்தை 378

எண்சா ணுடலி லேக னமைத்தவகை
வெண்முச் சுடர்மூன்றும் விழுங்கினது நீ கேளாய் 379

ஆதியனாதி சோதி யடங்கினது மூன்றிலேதான்
நீதியுட னறிந்து நீர்பாருந் தீனோரே 380

அரூபம் கரூபரெண்டு மாணோடு பெண்ணாச்சு
அருளாணும் பெண்ணும் அல்லா முஹம்மதுவாம் 381

அல்லா முஹம்மதுவும் அகளும் சோதிறாகு றாகானி
சொல்லும் அகதுகதுப் சோதிறாகு றாகானி 382

அடவுறாகு றாகானி யரியவுட லுயிராகும்
உடலுமுயிரு முணவு நினைவாகும் 383

உணவு மருத்தாகு முறைநினைவு காயாத்தாகும்
இணையு மீமானிசுலா மின்னபடி யென்றறிந்து 384

நாமான நற்கலிமா நாட்டம்வைத்தே யென்னாளும்
சீமான் றனமிதுவே செப்பமுடியாது கண்டீர் 385

கனியான கலிமாவைக் கருத்தி லெழுப்பி யுன்னித்
துனியாவி லறியாதார் தோசிப்பெரும் பாதகராம் 386

துனியாவி னாசைகொண்டாற் றுலங்குங் கலிமாவறியார்
அநியாயக் காரனென்று மவர்நெற்றி லெழுதப்படும் 387

நபுசுடைய ஞாய நவிலுகிறேன் கேளுமினி
நபுசும் மாறத்துத்தானு நலமறியாக் காபர்குணம் 388

நபுசுலெவ்வாமத்தென்பது நல்லதொரு மீன்குணம்
நபுசு முஹில்மானென்பது நல்ல அவுலியாக்கள் குணம் 389

நபுசு முத்மயின்னாவு நல்ல அன்பியாக்கள் குணம்
சொகுசுடனே யிதனைத் துரிதா யறிந்துகொள்ளும் 390

வாழ்வுதீவு பன்னீராயிரம் வழுத்தினேன் முன்புறமாய்
பாழ்வுதீவு பன்னீராயிரம் பகர்ந்தேன் பின்புறமாய் 391

காலமது நான்குங் கழறுகிறேன் கேளுமினி
கால முதன்மையது காற்றுடைய காலமதாம் 392

மாற்றில்லா வெயிற்காலம் வாலிபந்தானாகும்
பேறில்லா மழைகாலம் பெருமனுடர் தங்காலம் 393

மாறாப் பனிக்காலம் வயதுசென்ற கிழவனுமாம்
நேரான திம்மூன்று நின்வயத்தின் விபரம் 394

முன்னோன் சிபத்தேழு மொழியுகிறேன் கேளுமினி
முன்னோரின் பேச்சுமூச்சு முன்பார்வை கேள்வியுமாம் 395

அந்த வுடல்யாது மறிந்துகொள்ளும் றாகுஅதில்
இந்தவகை யேழு மிறைவன் சிபத்தாகும் 396

நபியுடைய றவுலாவும் நடுநெஞ்சி தானாகும்
நெறியுள்ள பாத்திமத்து நெஞ்சிக் குலக்கொழுந்தாம் 397

விருப்பமுள்ள அசனுசைனும் விலாகுடை யிரண்டாகும்
பெருப்பமுள்ள விதனைப்பேணி யறிந்துகொள்வீர் 398

சந்த முடியாகுந் தன்ரோம மின்னலதாம்
முத்தான வைந்தெழுத்து முகாமிலே சொல்லுகிறேன் 899

லாசூக் மகாமில் லாவென் றெழுத்துவாம்
நேசமலக்கூத் மகாமில் நிகழ்த்துகின்ற லாவெழுத்தாம் 400

ஜெபறூத்மகாமில் சிறந்ததொரு இல்லதுவாம்
நவிலுமலாகூத் மகாமில் நல்லதொரு அல்லதுவாம் 401

ஆகூத்மகாமில் ஆகாசம் கூவதுவாம்
யாகூ அவனுகும் ஆதி யொருவனுமே 402

நீதி தனையறிந்து நேசவுருவாகிக் கொள்ளும்
ஆதி யொருவனுட அவ்வெழுத்தைத் தானறிய 403

வாத்தியெழுத்துக்கு வகைகேளும் மீரிடத்தில்
பார்த்துப் படித்துப் பண்புடனே நீகேட்டால் 404

நாட்டத்தின் படியே நவில்வார்களுந்தனுக்கு
வாட்டமது தீர்ந்துவிடும் வல்லோன் தீதாறுகிட்டும் 405

வஸ்திசெய்யும் பக்கீர்வகை வழுத்துகிறே னன்குவகை
கிஸ்தியாபக்கீர் செப்பினேன் ஹக்கேகர்வு 406

தபக்காத்தியா பக்கீர் செய்யிதுற் றசூல்வழியாம்
உப்பான சறுவருதி பக்கீ ருரையாத நபிவழியாம் 407

காதிரியா பக்கீர் காதிர் முஹியித்தீனும்
நீதமுடன் தன்னுடலில் நிற்கும்வகை பக்கீர்நான்கும் 408

தன் சரீரத்தினிலே சாற்றுகிறேன் பக்கீறுவகை
தன்னுடைய பூறு சாற்று மசிஸ்தியாவகும் 409

தன்னுடைய திக்கீர் சாற்றுந் தபாக்காத்திய்யாவாம்
தன்னுடைய எகின் சறுவருதியாவாகும் 410

ஆண்டவனி னேவ லருள் காதிரிய்யாவாம்
மீண்டுஞ்சரி அத்தையும் வியனூர் தரீகத்தையும் 411

மேலோர் அகீகத்தையும் விளம்பினேன் மகரிபத்தும்
நாலுவகை யாலினையோ னுமறிந்து வணங்கவேண்டும் 412

நன்றாரேழுகடல் நம்முள் நவிலுகிறேன் கேளுமினி
ஒன்றாவதுகடல்தா னுறுதியுள்ள தீதாறு 413
ரண்டாவது கடல்தா னேர்ந்து துவாக் கேட்கிறது
முண்டக மூன்றாங்கடற்றான் முன்னவன் திக்கிறாகும் 414
நாலாவது கடல்தா னுயனுட நாட்டமதாம்
ஆலமதில் தீனோரே யணுகாதவன் நெருப்பு 415
தீண்டாத வைந்தாங்கடல் தீனுடைய புகழாகும்
ஆண்டண்டா தாறாங்கடலா லம்பனு வாகிறதாம் 416
ஏழாங்கடற்றானே னேகனுட எகீமாம்
காலமதில் கின்னமொன்று கழறுகிறேன் கேளுமினி 417
ஒருவிரற் கிடைகபுறு முரைக்குகிறேன் மூக்காகும்
திறமான மூன்றுவிரற் கிடை சொல்லுகிறேன் காதாகும் 418
நாலுவிரற் கிடைமசிது நல்லதொரு வாயாகும்
மாலுமையர் இம்மூன்றும் வணங்கியறிந்துகொள்ளும் 419
தலையிலிருப்பதென்ன சாற்றுமெனக்கேட்டால்
தலையில் சரிஅத்து தரிகத்து மிருக்குதென்னும் 420
நெற்றியி லிருப்பதுதா னெடியோன் சுஜூதென்றுரையும்
உத்தகண்ணி லிருப்பதென்ன வுரையு மெனக்கேட்டால் 421
கண்ணிலிருப்பதுதான் கழறிரண்டு முத்தெனவே
திண்ணமுள்ள காதிலிருப்பதென்ன செப்பு மெனக்கேட்டால் 422
காதிலிருப்பது பாங்குங் காமத்து மென்றுசொல்லும்
மேதினியோர்க்கிந்த வெற்றிபோற் கிட்டாதே 423
மூக்கிலிருப்பதென்ன மொழியுமெனக்கேட்டால்
மூக்கிலிருப்பதுதான் குழங்குசொர்க்க வாசமென்னும் 424
கையிலிருப்பதென்ன கழறுமெனக்கேட்டால்
கையிலிருப்பதுதான் கனசக்காத் தெனவுரையும் 425
நெஞ்சிலிருப்பதென்ன நிகழ்த்துமெனக்கேட்டால்
நெஞ்சிலிருப்பதுதா னெடிதயவன் சுவர்க்கமென்னும் 426
வயிற்றிலிருப்பதென்ன வழுத்துமெனக்கேட்டாற்
வயிற்றிலிருப்பதுதான் வன்னிபசித் தாகமென்னும் 427

பீடமிருப்பதெங்கே பிரித்துரையு மென்றாக்கால்
பீடமிருப்பதுதான் பீருகுரு வடிவாம் 428

துடையிலிருப்ப'தென்ன தொகுத்துரையு மென்றாக்கால்
துடையிலுருப்பதுதான் துய்ய அதபென்று சொல்லும் 429

காலிலிருப்பதென்ன கழறுமெனக் கேட்டால்
காலிலிருப்பதுதான் கத்தன் றஹ்மத்தென்று சொல்லும் 430

நாவிலிருப்பதென்ன நவிலுமெனக் கேட்டால்
நாவாவது லௌகு நடுநாக்குக் கல்பாகும் 431

நாக்குமதில் இசுக்கும் நல்ல வொருமை இயாகும்
மூக்காவதென்ன மொழியுமெனக் கேட்டால் 432

மூக்கின்சுழி முனையாம் முன்னோன் அலிபாகும்
நீக்கமறவிதனை நிண்ணயமாகக் கண்டுகொள்ளும் 433

ஈமானத்தின் பெருப்ப மியம்புமெனக் கேட்டால்
ஈமானில் ஒளிவை யியம்புகிறேன் மெய்யாக 434

ஈமானில் லாகிறது இயம்பினேன் சக்காத்து
ஈமானடபடிதான் ஏகன் அமலாகும் 435

ஈமானுடையோ னென்னுடனே யென்றுசொல்லும்
ஈமானமான நடபடிகளீ தாமே 436

தசுபிமணியென்ன சாற்றுமெனக் கேட்டால்
தசுபியது சபூர்நோன்பு தானு முவமையுண்டு 437

தம்சிதுமென்ன சாற்றுமெனக் கேட்டால்
தம்சீத்தாகிறது தானோன் புவமையில்லை 438

நம்முடைய சீரம் நால்வேதந்தானும்
தம்முள்ளே தானறிந்து நாதனைத்தான் போற்றாமல் 439

துனியாவை நம்பி துன்மார்க்கமா நடந்தால்
அநியாய காரரென்றே யழிநரகிற்றள்ளுவரே. 440

பனியா தமக்களிலே மதிகெட்டோர் தானாகி
யினிதான நற்கலிமா இருத்தி வணங்காமல் 441

ஐயனை வணங்காமல் அவனேவல் தானகற்றி
மைபனிபுலிசுடையி[illegible]ாய்கையதற் குள்ளாகி 442

தீனை யுவக்காமல் தீன்கலிமா நடவாமல்
தீனை முகமாறிச் சோராதீர் நரகபதி 443
ஆண்டவன்தீ தாறுடனே யரியநபி ஷபாஅத்து
மாண்டபின்யு தேடினன் வந்துனக்குக் கிட்டுமோதான் 444
கிட்டா தொருநாளுங் கீர்த்தியுள்ள கியாமத்திலே
சுட்டாலு முங்களுக்குச் சொரணைவரப் போறதில்லை 445
கெட்டாலுங்கேடு கேட்பதே யுச்சிதந்தான்
முட்டாளாய்ப் போகாமல் முயலுங் கலிமாவை 446
எட்டா தொருநாளு மொழுமூச்சைப் போக்கிவிட்டால்
பட்டவர்க்குப்பாடு பயந்தெளியுங் கண்டாயே 447
கெட்டவர்க்குக் கிடைமுதல்கள் கிட்டினது போலேதான்
விட்ட குறையிருந்தால் விளங்குமே தீதாறு 448
முத்தகலிமா வல்லால் மொழியவே றென்றுமில்லை
சத்தியமாய்ச் சொன்னேன் தவறாதே யிக்கலிமா 449
புத்தியுள்ளபேர்க்குப் போதுமே யிவ்வறிவு
புத்தியில்லா தார்க்குப் பூக்கா தொருநாளும் 450
ஜெகமுழுதுந் தேடினுஞ் சிக்காதே யிவ்வறிவு
அகமதிலே பார்த்துணர்ந்தே யறிவாற்றெளிந்துகொள்வீர் 451
சேகுபீர் முஹம்மதுதாட் செப்பினேன் தீதாறை
வாகுபெற வுலகோர்க்கு வழுத்தினேன் வெளியாக 452
பாடிப் படித்துவிட்டாற் பலனில்லை கண்டாயே
பாடிப்படித்தபடி பழக்கஞ்செய்ய வேண்டுங்கண்டாய் 453
நாடினல் நாடுவான் நாடாட்ட லொன்றுமில்லை
தேடினல் முன்னிடுவான் தேடாட்டா லொன்றுமில்லை 454
வாடி மெலியாமல் மவுதுக்கு வந்திருந்தால்
தேடரிய வெல்லாந் தினந்தினமும் பார்த்திருப்பீர் 455
கண்டுபிடித்தே கருத்துனு வந்தவர்க்குக்
கண்டகல்லும் வாய்திறக்குங் கத்த னுவந்திருப்பான் 456
ஆமினல்லா ஆமி னறிந்துகொள்ளுந்தீனேரே
சீமையெங்கும் போனலுஞ் சிக்காதே யிவ்விறிவு 457

பார்த்துப் படித்துப் பலன்பெருங்கோ தீனோரே
பார்த்தவர்க்கு நல்ல பலன் கிடைக்குந்தீனோரே 458

வெள்ளிநல்லதிங்கள் விளங்குகிற வாரத்திலே
செல்வமுள்ள தீதாறை தீனோர் நாளோதிடுங்கோ 459

ஒலுவுடனே தானிருந்து யுண்மையா யோதிடுங்கோ
நலிவின்றிக் கேட்டபடி நன்றாகவே நடந்தால் 460

அல்லா றசூலருளால் அப்பதியிற் சேர்ந்திருப்பீர்
சொல்லுஞ்சொர்க்கமே பெறுவீர் சுகமுண்டு தீனோரே 461

படித்தவர்க்குக் கோடிபலன் படைத்தோன் கொடுத்தருளவான்
படித்தோருங் கேட்போரும் பாத்திகா வோதிடுங்கோ 462

ஆண்டவர் போலே அதியாவுஞ் செய்திடுங்கோ
பூண்டசலவாத்தோதி புகழ்திக்கிர் செய்திடுங்கோ 463

அமிநல்லாஆமி னறிந்து தவம் பெறுவீர்
பூமிதனில் நல்லபுகழை யறிந்துகொள்வீர் 464

அண்ணலிறசூலு மவர்களும் மற்றும் வாழி
திண்ணமுள்ள நால்யார்கள் தீனோரேல்லாம்வாழி 465

ஆலிமைந்தரான அசனுசைனுமேவாழி
ஒலிமார்க்கொலியாம் உண்மை முஹியித்தீன் வாழி 466

முத்திக்குயிர்செய்வீர் முஹம்மதருந் தர்ன்வாழி
வற்று மலைச்சருவில் வரிசை முஹம்மதரும் வாழி 467

படித்தோர்கள் கேட்டோர் பண்புடனே தான்வாழி
நொடிக்குமெ[illegible]லோரும்வாரும்வாழி நூலுரைப் போம்வாழி 468

பூமியின் மும்[illegible] [illegible]ழிந்தோர்களும்வாழி
ஆமினல்லா ஆமீன் மாறப்பல ஆலமீனே. 469

தீதாறுமாலை முற்றிற்று

சக்கரவர்த்தி பிரஸ், நெ. 189, தங்கசாலை வீதி, சென்னை - 1953.

இஸ்'லாம் மார்க்கப் புத்தகங்கள்

78
1-141

	ரூ.	அ.
முகையித்தீன் மாலை 5-முனாஜாத்து சேர்ந்தது	1	0
இராஜமணி மாலை	2	0
சார்தர்வேஸ் 4 பக்கிர்கிஸ்ஸா	2	0
மஸ்தான் சாஹிபு பாடல்	2	0
முகையித்தீன் ஆண்டவர்கள் சத்துருசங்காரம்	1	0
மெய்ஞ்ஞானரத்தின அலங்கார கீர்த்தனை	1	0
நஸீஹத்து இஸ்லாம் ஹனபிய்யா	0	12
நஸீஹத்து இஸ்லாம் ஷாபிய்யா	0	12
…சைத்தூன் கிஸ்ஸா	0	12
…ா ருமசாலா	0	12
…நறமாது	0	12
…ஷன்முன் கிஸ்ஸா	0	8
…ப்பாரந்தியம்மானை	0	8
…ரத்தினமுஹம்மது காரண சரித்திரம்	0	10
…தாருமாலை	0	8
…ரண விளக்கம் மனதை துலக்கும்	0	5
…மில் குறம்	0	8
…ன்புத்தி மாலை	0	3
…ருத்து நாமா	0	3
…லீப்படைப்போர்	0	5
…ருமூடியிறக்கிய ஹதீது	0	3
…ஸீஹத்துநாமா	0	3
…லவாத்து பாட்டு	0	[illegible]
…ர்முனை [illegible]	0	3
…ண [illegible] நவஞ்சி	0	3
…ல் மாலை	0	12
…பிகத்து படைப்போர்	0	12
…மாலை	1	0.

…டா-பார்த்தசாரதி நாயுடு சன்ஸ்,

நெ. 189, தங்கசாலை தெரு, சென்னை.